EVERSAFE ACADEMY

Steps To Success




# EA - Journal

*Issue 3 - Dec 2022*

Copyright © @ Eversafe Academy 2022

# Contents


- நிர்வாக இயக்குனரிடமிருந்து செய்தி
- நமது சாதனைகள்
- அம்சங்கள் மற்றும் சிறப்பம்சங்கள்
- தொழில்துறை செய்திகள் மற்றும் போக்குகள்
- நமது எவர்சேப் கதைகள்
- நற்சான்றிதழ்
- சுகாதார குறிப்புகள் மற்றும் உத்திகள்
- வேடிக்கையான புதிர்கள் மற்றும் விளையாட்டுகள்
- EA புதிய பயிற்சி வகுப்புகள்
- வரவிருக்கும் நிகழ்வுகள்
- எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்
- எவர்சேப் அகாடமி பற்றி




# நிர்வாக இயக்குனரிடமிருந்து செய்தி

எவர்சேப் அகாடமி நற்சான்றிதழின் 3வது இதழுக்கு வரவேற்கிறோம், இது டிசம்பர் 2022க்கான நமது ஆண்டு இறுதி பம்பர் இதழாகும்.



எவர்சேஃப் அகாடமியின் கடந்த 2022 ஆம் ஆண்டைத் திரும்பிப் பார்க்கும்போது, பல்வேறு முன்முயற்சிகள் மற்றும் பல்வேறு துறைகள் முழுவதும் செயல் திட்டங்களை மிகக் கடுமையான தரக்கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தி மற்றும் எங்கள் மிகச்சிறந்த பயிற்றுனர்களின் கடின உழைப்பு, எங்களால் முடிந்தவரை மிகச்சிறந்த தரமான பயிற்சியை கற்றுத் தேறும் வகையில் நூதனமான மற்றும் தரமான வசதிகளை எங்கள் மாணவர்களுக்கு வழங்குவதை உறுதி செய்து அத்தோடு தொழில்துறை நிபுணர்கள் மற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் திறன் மேம்பாட்டுக்கான தொழில்துறையின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தரமான கல்வி மற்றும் தொழில்துறை சார்ந்த செயல்திட்டங்கள் மற்றும் பாடத்திட்டங்களை உருவாக்கியதன் மூலம் எங்களின் தொலைநோக்குப் பார்வை, இயக்கம் மற்றும் மதிப்பீடுகள் அத்தோடு சேர்த்து முழுமையான கல்வித்தத்துவம் (கல்வி, சுற்றுச்சூழல் மற்றும் வேலைவாய்ப்பு) ஆகியவற்றை உண்மையாகவே முழுமையாக பின்பற்றி வந்துள்ளோம் என்பதை எங்களால் உறுதிபடக் கூறமுடியும்.

## 2022 ஆம் ஆண்டின் மைல்கற்கள்

- முழுமையான கல்வியின் அறிமுகம்
- கற்பித்தல் மற்றும் நிர்வாகத்தில் தொடர்ந்து சிறந்து விளங்கியதற்கான EduTrust நான்கு ஆண்டிற்கான அங்கீகாரம்
- ஜூ கூன் வளாகக் கிளையில் அனுபவ கற்றல் நிலையங்கள் (ELS)
- 4வது வளாகக் கிளை 2 வான் லீ சாலையில்
- மாதாந்திர EA - ஆய்விதழ் வெளியீடு
- EA பசுமைத் திட்டத்தின் ஒரு பகுதியாக ரொக்கமற்ற வகையில் தொகை செலுத்தும் வசதி

2022 ஆம் ஆண்டில் எங்களின் அனைத்து மைல்கற்களையும் வெற்றிகரமாகச் சாதிக்க செலவழித்த கிட்டத்தட்ட ஒரு மில்லியன் டாலர்கள் நிதி அர்ப்பணிப்புடன், எங்களுடைய கற்பவர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் தரத்தின் அடிப்படையில் சிறந்ததை வழங்குவதற்கு நாங்கள் எப்போதும் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்.

கட்டுமானத் தளங்களில் தொழிலாளர் பாதுகாப்பில் கடுமையான தரநிலைகளுக்கு ஏற்ப பாதுகாப்பில் அதிக விழிப்புணர்வை ஏற்படுத்த, தொழிலாளர் நிலை கட்டுமானப் படிப்பிற்கான 10 பாதுகாப்பு உருவகப்படுத்துதல் கற்றல் நிலையங்களை உள்ளடக்கிய எங்கள் அனுபவ கற்றல் நிலையங்களை (ELS) வழங்குவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

## 2023க்கான கண்ணோட்டம்

2023 ஆம் ஆண்டில் எங்களிடம் கற்பவர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு நீடித்த நிலையான வகையில் தரமான கல்வி மற்றும் நிர்வாகத் திறன்களை வழங்குவதற்காக கற்றலில் புதுமை மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்தை எட்டி சாதனை புரிய எவர்சேஃப் அகாடமி, தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது .
செயற்படுத்த ஏற்கப்பட்டுள்ள திட்டங்களின் முன்னோட்டம்
1. எங்கள் EA பசுமைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, எங்கள் மின்னிலக்க (டிஜிட்டல்)சுற்றுச்சூழல் அமைப்பில், எங்களின் அனைத்து செயல்முறைகள் மற்றும் அமைப்புகளையும் 90% காகிதமற்றதாக மாற்றுவதன் வழியாக எங்கள் ஆன்லைன் பயன்பாடுகளின் தொகுப்பை படிப்படியாக மேம்படுத்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.
2. கல்விசார் பங்காளித்துவம்
3. தொழில்துறை இணைப்புத் திட்டம்
4. சர்வதேச மாணவர்கள் குழு
5. 5. மிகவும் புதுமையான மற்றும் கலவைக் கற்றல் முறைகள்
எவர்சேஃப் அகாடமி இதழின் (டிசம்பர் 2022) உயர்மிகு இசைவுப்பதிப்பான 3வது வெளியீட்டில் நீங்கள் வாசிப்பதற்காக நாங்கள் கவனமாக தேர்ந்தெடுத்த பகுதிகளை வசித்து மகிழ்வீர்கள் என்று நம்புகிறோம்.

**இனிய விடுமுறை நாட்கள் வாழ்த்துகள் நன்றி!**

# நமது சாதனைகள்


## ISO 29993 சான்றிதழ்

2022 ஆம் ஆண்டு பாடத்திட்டங்களுக்கான தொடர் கண்காணிப்பு தணிக்கையை (ISO 29993) எவர்சேஃப் அகாடமி வெற்றிகரமாக முடித்துள்ளது மற்றும் CFP அல்லாத பாடத்திட்டங்களுக்கு புதிய பாடத்திட்டச் சான்றிதழ் தணிக்கையை நடத்தியது மற்றும் SSG-அங்கீகாரம் பெற்ற நமது அனைத்து பாடத்திட்டங்களும் ISO 29993 -ன் சான்றிதழ் அங்கீகாரம் அளிக்கப்பட்டவை என்பதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது.



## EA – இதழ் தற்பொழுது 6 மொழிகளில்

EA இதழ் வெளியீட்டின் போது எங்களிடம் கற்றவர்கள் மாணவர்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்ற அமோகமான வரவேற்பு மற்றும் நலம் விரும்பிகளின் ஆலோசனைகளின் அடிப்படையில், வெவ்வேறு மொழி பேசுபவர்களுக்கு, குறிப்பாக கற்பவர்களில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு EA இதழை கிடைக்கச் செய்வதன் முக்கியத்துவத்தை அறிந்தோம். எவர்சேஃப் அகாடமியின் EA இதழின் 3வது வெளியீடு (டிசம்பர் 2022) இப்போது ஆங்கிலம், மாண்டரின், மலாய், தமிழ், பெங்காலி மற்றும் பர்மிஸ் உள்ளிட்ட 6 மொழிகளில் பதிக்கப்படுகிறது.



# சிறப்பம்சங்கள் & முக்கிய கூறுகள்



## புதிர் போட்டி வெற்றியாளர்கள் - நவம்பர் 2022

நவம்பர் 2022 EA இதழில் வெளியிடப்பட்ட புதிர் விளையாட்டுப் போட்டியின் வெற்றியாளர்கள்



**ELANGOVAN VANTHIYADEVAN**



**KATHIRESAN SIVAKUMAR**




**SATHEESH KUMAR**

### ரொக்கமில்லா தொகை செலுத்தல்கள்:

**எவர் சேஃப் அகாடமியின் EA பசுமைத் திட்ட முன்முயற்சியின் ஒரு பகுதியாக அனைத்து கிளைகளிலும் பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒன்றின் மூலமாக ரொக்கமில்லா பண செலுத்தல்களை மேற்கொள்ள ஏற்பாடுகளை செய்துள்ளது**

(NETS / PayNow / PayLah / மின்னிலக்க வங்கி பரிமாற்றம் / கிரெடிட் கார்டு / GIRO / காசோலை)



# தொழில்துறை செய்திகள் மற்றும் போக்குகள்

## உலகளாவிய வாழ்நாள் கற்றல் உச்சிமாநாடு 2022 (SKILLSFUTURE SINGAPORE - SSG) (2022 நவம்பர் 1 முதல் 2 வரை)

### வாழ்நாள் கற்றலின் சமூக-பொருளாதார தாக்கத்தை அதிகப்படுத்துதல்

உலகளாவிய வாழ்நாள் கற்றல் உச்சி மாநாடு (GLOBAL LIFELONG LEARNING SUMMIT )2022 மூத்த அமைச்சர் தர்மன் சண்முகரத்தினம் அவர்களால் நவம்பர் 1, 2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது, இதில் தொழிலாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களின் மூன்று முக்கிய குழுக்கள் உட்பட பின்தங்கி விடப்படும் ஆபத்து நிறைந்த அனைவருக்கும் முன்னேற்றத்தை உறுதிசெய்வதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டு, வாழ்நாள் முழுவதும் கற்றல் அமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது,

வாழ்நாள் முழுவதும் கற்றலின் அணுகுமுறையானது "ஒரு சமூகமாக நிகழ்கால மற்றும் எதிர்கால நெருக்கடிகளை எதிர்கொள்ளும் வகையில், கூட்டாக மீண்டெழும் திறனை கட்டியமைப்பதற்கான ஒரு வழிமுறையாக" அமையவேண்டும் என்று திரு தர்மன் கருத்துரைத்தார்.

தொழிலாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான இந்த அணுகுமுறை அடிப்படையில் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி உற்பத்தித்திறனை உயர்த்த உதவும் "வழக்கமான ஒன்றாக மாறும்", வகையில் " இடைவிடாத தொடர்ச்சியான மேம்பாடு மற்றும் மீள் திறன் மற்றும் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கற்றலின் உள்வாங்குதல்களில்" மேற்கொள்ளவேண்டிய கண்காணிப்பின் முக்கியத்துவம் குறித்து அவர் மேலும் வலியுறுத்தினார்.

மொத்த பொருளாதாரம் முழுவதிலும் நிலவும் திறன்களுக்கான தேவையை எதிர்பார்த்து , பயிற்சியின் உள்ளடக்கம் மற்றும் முறைகளுடன் அந்தத் தேவைகளை இணைக்கவேண்டும் என்றும் மற்றும் அதன் மூலம், தொழிலாளர்கள் மற்றும் வேலை தேடுபவர்கள் இருவருக்குமே அவர்களின் தொழில் வளர்ச்சிக்கு உதவும் வகையில் இந்த பயிற்சி வகுப்புகளை வழங்கவேண்டும் என்று நிறுவனங்கள் மற்றும் பயிற்சி வழங்குநர்களுக்கு மூத்த அமைச்சர், அழைப்பு விடுத்தார்,

ஆபத்தை எதிர்நோக்கியிருக்கும் மூன்று முக்கியமான தொழிலாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களின் குழுக்களில் அடங்குபவர்கள் உடலுழைப்புத் தொழிலாளர்கள் (blue-collar) மற்றும் தொழில் திறனில் உடலுழைப்பு தேவைப்படாத தொழிலாளர்கள் (white-collar), தொழிலில் நடுத்தர நிலையிலுள்ள தொழிலாளர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களில் (SMEs) பணிபுரிபவர்களாக இருப்பார்கள் என்று திரு தர்மன் மேலும் தனது எண்ணங்களை பகிர்ந்து கொண்டார்.

உடலுழைப்புத் தொழிலாளர்கள் (blue-collar) மற்றும் தொழில் திறனில் உடலுழைப்பு தேவைப்படாத தொழிலாளர்களின் (white-collar), "ஒவ்வொரு பிரிவினருக்கும் தரமான கற்றலுக்கான சம வாய்ப்புகளை வழங்கும்" வகையில் "வசதியான மற்றும் பொருத்தமான வழிகளோடு" கல்வித்திட்டம் வடிவமைக்கப்பட வேண்டும் என்று அவர் முன்மொழிந்தார்.

நீண்ட காலமாக பள்ளிக்கு செல்லாத மற்றும் பிற கடமைகள் காரணமாக அதிக கால அவகாசம் இல்லாத, இரண்டாவது குழுவைச்சேர்ந்த இடைநிலைத் தொழிலாளர்களுக்கு புதுமையான முறையில் வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டங்களை வழங்கலாம்.
இந்த கற்கும் வயது வந்தவர்கள் எதை, எப்படி கற்க வேண்டும் என்பதை தீர்மானிப்பதில் அது ஒரு பங்காற்றும்.
தங்கள் சொந்த பயிற்சித் திட்டங்களை உருவாக்க சிறிய SMEகளுக்கு உதவலாம், இதன் மூலம் தங்கள் தொழிலாளர்களுக்கு நிறுவனத்திற்குள் தொழில் முன்னேற்றத்தை அனுமதிக்கும் வகையில் வேலை வாய்ப்புகளின் வரம்பை அதிகரிக்கலாம்.

"வாழ்நாள் முழுவதும் கற்றல்" உட்பட எவர்சேஃப் அகாடமியின் தொலைநோக்கு பார்வை, இயக்கப் பணி மற்றும் மதிப்பீடுகள், அனைத்தும் வாழ்நாள் முழுவதுக்குமான கற்றல் அமைப்போடு முழுமையாக ஒத்திசைந்து இருக்கிறது. இதுவே ஸ்கில்ஸ் ஃப்யூச்சர் சிங்கப்பூரின் உலகளாவிய வாழ்நாள் கற்றல் உச்சிமாநாடு 2022 இன் இலக்காக அமைந்துள்ளது. வரும் ஆண்டுகளில் தொழிலாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களின் தேவைக்கான மற்றும் புதுமையான பாடத்திட்டங்களை அமைத்துக்கொடுக்க இது நம்மை மேலும் ஊக்குவிக்கும்

https://www.glls2022.sg/

# தொழில்துறை செய்திகள் மற்றும் போக்குகள்

## எதிர்காலப் பொருளாதாரத்திற்கு தேவைப்படும் திறன்கள் குறித்த அறிக்கை (2வது பதிப்பு)
## (ஸ்கில்ஸ் ஃப்யூச்சர் சிங்கப்பூர் - Skillsfuture Singapore (SSG) - 22 நவம்பர் 2022)

தேசிய திறன் முகைமையான ஸ்கில்ஸ் ஃப்யூச்சர் சிங்கப்பூர் (SkillsFuture Singapore (SSG) செவ்வாய்க்கிழமை (நவம்பர் 22) வெளியிட்ட எதிர்காலப் பொருளாதாரத்திற்கான திறன்கள் தேவை குறித்த அறிக்கையின் 2 வது பதிப்பில் கூறப்பட்டபடி, 2023, 1 ஜனவரி 1 முதல், சிங்கப்பூரின் அனைத்து குடிமக்களும் எவர்சேப் அகாடமி உட்பட சிங்கப்பூரில் உள்ள பொது மற்றும் தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் வழங்கும் பல்வேறு புதுப்பிக்கப்பட்ட ஸ்கில்ஸ் ஃப்யூச்சர் பாடத்திட்டங்கள் டிஜிட்டல், பசுமை மற்றும் பராமரிப்புத் தொழிலகங்களில் திறன்களைப் பெறுவதற்கான சிறப்புப் பயிற்சியை மூலம் பெறலாம்.

எதிர்கால பொருளாதாரத்திற்கான திறன்கள் தேவை அறிக்கையானது சிங்கப்பூர் தொழிலாளர்களின் " திறன் முன்னுரிமைகளை " அடையாளம் கண்டு அவர்களின் தொழில் வாழ்க்கை பாதைகளை திட்டமிட உதவுவதை நோக்கமாக கொண்டுள்ளது. இந்த ஆண்டு அறிக்கையானது, சிங்கப்பூரில் குடியிருக்கும் தொழிலாளர்களில் பாதி எண்ணிக்கையிலுள்ள குறிப்பாக 40 முதல் 59 வயதுக்குட்பட்ட தொழில் வாழ்க்கையில் இடைக்கால கட்டத்திலிருக்கும் தொழிலாளர்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் தொழில் வாய்ப்புக்கள் குறித்து விவரித்துள்ளது.

ஸ்கில்ஸ் ஃப்யூச்சர் ஃபெல்லோஷிப்ஸ் அண்ட் எம்ப்ளாயர் அவார்ட்ஸ் செரிமனி 2022 இன் அறிக்கையை வெளியிட்ட கல்வி அமைச்சர் திரு சான் சுன் சிங், தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் செழித்து முன்னேற தற்போது திறன் மேம்பாடு மற்றும் மீள் திறனின் தேவை குறித்து கூறினார்.

"தொழில் போட்டியில் நிலைத்திருக்க, நிறுவனங்கள் மாற்றங்கள் கண்டு வளர்ச்சியை அடையவேண்டும், அதற்கு புதிய திறன்கள் மற்றும் தகுதியுடைமை தேவைப்படுகிறது," என்று அவர் கூறினார்.

"இந்தத் தகுதித்திறன் இடைவெளிகளை நிரப்ப சந்தையில் இருந்து தனிநபர்களை வேலைக்கு அமர்த்துவதற்குப் பதிலாக, நிறுவனங்கள் தற்போதுள்ள தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிப்பதிலும் அதற்கான முதலீட்டை செய்யலாம்."

இந்த ஆண்டு ஸ்கில்ஸ் ஃப்யூச்சர் அறிக்கையானது, டிஜிட்டல், பராமரிப்பு மற்றும் பசுமை பொருளாதாரங்களுடன் தொடர்புடைய முன்னுரிமைத் திறன்களை “சைபர் பாதுகாப்பு முதல் பசுமை உள்கட்டமைப்பு மற்றும் சுகாதாரம் மற்றும் உடல் நலம் வரையிலான வளர்ச்சி கண்டுவரும் 18 களங்களாக" தொகுத்திருக்கிறது.

உற்பத்தி மற்றும் அதன் தொடர்புடைய துறைகளில் உள்ள நிறுவனங்கள் டிஜிட்டல், பராமரிப்பு மற்றும் பசுமைப் பொருளாதாரங்களைத் தவிர, தொழில் 4.0 (I4.0) தொழில்நுட்பங்கள் மற்றும் செயல்முறைகளை அதிகளவில் ஏற்றுக்கொண்டு வருவது தொடர்புடைய 60 முன்னுரிமை திறன்களை SSG அடையாளம் கண்டுள்ளது.தொழில் பதிப்பு 4 (I4.0) இன் முக்கிய கருப்பொருள்களாக டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் நிலைத்தன்மை ஆகியவை இருப்பதால், டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரங்களுடன் இணைக்கப்பட்ட முன்னுரிமைத் திறன்களுடன் அவை "நியாயமான அளவில் ஒன்றோடொன்று மேற்பொருத்தத்தைக் கொண்டிருக்கிறது " என்று SSG தெரிவித்துள்ளது.

முன்னர் எட்டு பகுதிகளாக வகைப்படுத்தப்பட்ட ஸ்கில்ஸ் ஃப்யூச்சர் தொடர் கல்வித் திட்டங்கள், இந்த வளர்ந்து வரும் முன்னேற்றங்களுக்கு இணங்க இருப்பதற்கு மறுசீரமைப்பு ஏற்பாடு செய்யப்படும்.

அடிப்படை, இடைநிலை மற்றும் மேம்பட்ட பல்வேறு திறன் நிலைகளில் படிப்புகள் தொடர்ந்து கிடைக்கும்.

தொழில்துறை போக்குகளுக்கு பதிலளிக்கும் வகையில், பயிற்சி வழங்குநர்கள் ஏற்கனவே டிஜிட்டல், பசுமை மற்றும் பராமரிப்பு பொருளாதாரங்களில் படிப்புகளை உருவாக்கியுள்ளனர்.
எடுத்துக்காட்டாக, 2022 ஆம் ஆண்டில், ஆறு உள்ளூர் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஐந்து உள்ளூர் பாலிடெக்னிக்குகளை உள்ளடக்கிய உயர்கல்வி நிறுவனங்கள் - கார்பன் தடம் மேலாண்மை போன்ற பசுமைத் திறன்களில் புதிய படிப்புகளைத் தொடங்கியுள்ளன.

# தொழில்துறை செய்திகள் மற்றும் போக்குகள்

மற்ற புதிய படிப்புகளில் பசுமை வசதிகள் மேலாண்மை, நிலைத்தன்மையோடான பொறியியல் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மேலாண்மை போன்ற துறைகளில் சிறப்புத் திறன் பயிற்சிகள் அளிக்கப்படும்.

## பசுமைப் பொருளாதாரம் – வேலை வாய்ப்புகள்

பசுமைப் பொருளாதாரத்தில், இவை மிக மிக உயர்ந்த திறன் தேவை வளர்ச்சியைக் கொண்ட வேலைகளாக சுட்டிக்காட்டப்பட்டவை:
1. கட்டிடக்கலை/துணை கட்டிடக்கலைஞர்
2. கட்டுமான மேற்பார்வையாளர்
3. சூரிய ஒளிமின்னழுத்த திட்ட மேம்பாட்டு பொறியாளர்
4. இயந்திரமயமாக்க பொறியாளர்

சில வளர்ந்து வரும் களங்களில் வளர்ந்து வரும் திறன்களைக் கொண்ட வேலைகளில் உணவு பாதுகாப்பு நிபுணர் மற்றும் ஆற்றல், வள சுற்றறிக்கை மற்றும் டிகார்பனைசேஷன் துறையில் உணவு தொழில்நுட்ப வல்லுனர் உள்ளனர்.
தற்போதுள்ள பல வேலைகளுக்கு பசுமையான திறன்கள் தேவைப்படும் என்று SSG குறிப்பிட்டது, நிறுவனங்கள் அதிக சுற்றுச்சூழல் நிலையான நடைமுறைகளை செயல்படுத்துகின்றன மற்றும் நிலைத்தன்மை இலக்குகளை உருவாக்குகின்றன.

## மின்னிலக்க பொருளாதாரம்

அதிக பணி நிலைகள் உள்ள மற்றும் துறைகளுக்கான மின்னிலக்க பொருளாதாரத்தில், மின்னிலக்க சந்தைப்படுத்துதல், மின்னிலக்க வர்த்தகம், செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றில் திறன்கள் தேவைப்படும் என்று அறிக்கை கூறுகிறது.

தொழிலாளர்கள் கருத்தில் கொள்ளக்கூடிய சில வேலைகள் இவை:
1. தயாரிப்புபொருள் மேம்பாட்டு மேலாளர்
2. வாடிக்கையாளர் அனுபவ மேலாளர்
3. தரவு ஆய்வாளர்

4. மின்னிலக்க வர்த்தக மேலாளர்
5. அச்சுறுத்தல் பகுப்பாய்வு மேலாளர்

## இடைத்தொழில் - தொழிலாளர்கள்

இடைதொழில் தொழிலாளர்கள், ஐந்து வேலை வாய்ப்பளவுகளில் நன்கு பிரதிநிதித்துவம் பெற்றுள்ளனர் என்று SSG குறிப்பிட்டது:

1. இயக்கச் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகம்
2. விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் சேவை
3. மனித வளம்
4. நிதி மற்றும் கணக்கியல்
5. பொறியியல் மற்றும் தொழில்நுட்பம்

"சாத்தியக் கூறுள்ள மேம்பாட்டு செயல்பாடுகள் பாதைகள் மற்றும் கிடைக்கக்கூடிய வள ஆதாரங்களை குறிப்பிட்டு எடுத்துக் கூறுவதன் வழியாக" - அதே துறையில் அல்லது தொடர்புடைய துறைகளில் – பணியிட மாறுதல்களை மேற்கொள்ள விரும்பும் இந்த தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்க அரசாங்கம் ஆர்வமாக உள்ளது என்று திரு சான் கூறினார்.

தொழிலில் இடைக்கால பகுதியில் உள்ள தொழிலாளர்கள் அவர்கள் இருக்கும் தொழில் துறையிலேயே நீடித்திருக்க அல்லது வளர்ச்சி வாய்ப்புள்ள புதிய தொழில்துறைக்கு செல்லும் வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள, தங்கள் தொழில் திறன்களை மேம்படுத்த அல்லது புதிய திறன்களைக் கற்றுக்கொள்வதை கருத்தில் கொள்ளவேண்டும் என்று SSG கூறியது.

https://www.ssg-wsg.gov.sg/news-and-announcements/second-national-skills-report-published-to-help-singaporeans-plan-their-upskilling.html

# தொழில்துறை செய்திகள் மற்றும் போக்குகள்

## WSH தொழில்நுட்பம் - வாகனப் பாதுகாப்பு

சிங்கப்பூரின் WSH 2028 முழுமைத் திட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள யுக்திபூர்வமான வெளிப்பாடுகளை எட்டி அடைவதற்கு WSH தொழில்நுட்பம் ஒரு முக்கிய அணுகுமுறையாகும்.

**பொருத்தமான WSH தொழில்நுட்பத்தின் அமலாக்கம் பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது:**

1. அபாயகரமான நடவடிக்கைகளில் இருந்து தொழிலாளர்களை அகற்றவும்;
2. தொழிலாளர்களின் சூழ்நிலை குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துதல்;
3. அபாயகரமான நடத்தைகளை தடுத்து, மனிதத் தவறுகளைக் குறைத்தல்;
4. வேலையின் போது விபத்துகளின் அபாயத்தை அதிகரிக்கக்கூடிய உடல்நலக்குறைவு குறித்து மதிப்பீடு செய்து எச்சரிக்கை செய்தல்.

**WSH க்கான சாத்தியக்கூறுள்ள வாகன பாதுகாப்பு சூழ்நிலைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய WSH தொழில்நுட்பத்தின் எடுத்துக்காட்டுக்கள் பின்வருமாறு :**

### WSH தொழில்நுட்பம்

1. மேம்பட்ட வாகன ஓட்டுநர் உதவி அமைப்பு (ADAS) அல்லது மேம்பட்ட ரைடர் உதவி அமைப்பு (ARAS)
2. வாகன ஓட்டுநர் நிலை கண்காணிப்பு அமைப்பு (DSMS)
3. வாகன ஓட்டுநர் அல்லது ரைடர் நடத்தை கண்காணிப்பு
4. பார்வைக்குப் புலனாகாத இடத்தை கண்டறிதல்
5. 360 டிகிரி கேமரா
6. ப்ராக்ஸிமிட்டி சென்சார்கள் (அருகாமை உணர் கருவிகள்)

### தீர்வுகள்

- பின்வரும் காரணங்களால் வாகனம் மற்றும் கனரக உபகரணங்கள் பாதுகாப்பு குறைபாடு
- கவனக்குறைவாக வாகனம் ஓட்டுதல் அல்லது இயக்குதல்
- பார்வைக்குப் புலனாகத புள்ளி
- போக்குவரத்து மேலாண்மை (பாதைகள் மற்றும் தெளிந்த பார்வை நிலை)
- பாதுகாப்பற்ற வாகன ஓட்டுநர் அல்லது ரைடர் நடத்தை
- ஒரு இடத்திற்குள் அல்லது பொருட்களுக்கிடையில் சிக்கிக் கொள்வது

Vehicular related accidents is one of the top causes of fatal and major work injuries in Singapore. Many of these vehicular accidents were caused by issues relating to drivers' behavior or the lack of situational awareness.

பணியிடங்களில், மோசமான சுட்டிக்காட்டிகள் மற்றும் வாகனம் மற்றும் பாதசாரிகளின் போக்குவரத்தை முறையாக ஒழுங்குபடுத்தாதது போன்ற மோசமான போக்குவரத்து மேலாண்மை நடைமுறைகளும் வாகன விபத்துக்களுக்கு முக்கிய காரணமாக விளங்கும்.

வாகன பாதுகாப்பை மேம்படுத்த பரந்த அளவிலான தொழில்நுட்ப தீர்வுகள் உள்ளன. இவற்றில் சில, வரவிருக்கும் ஆபத்துகளைப் பற்றி ஓட்டுநர்களை (அல்லது ரைடர்ஸ்) எச்சரிக்க அல்லது சூழ்நிலை குறித்த அவர்களின் விழிப்புணர்வை அதிகரிக்க கூடுதல் கண்களாக செயல்படும் வேளையில் இதர அமைப்புக்கள் ஓட்டுனர்களின் கவனத்தையும் நடத்தையையும் கண்காணிக்க உதவுகின்றன.

அதிக அழுத்தத்துடன் கூடிய கடுமையான பிரேக்கிங், குறுகிய திருப்பங்களின் ஓரங்களில் வேகமாக இயக்குதல், , விரைந்த முடுக்கம் மற்றும் வேகம் போன்ற மோசமான ஓட்டுநர் செயல்பாடுகளை கண்காணிப்பதன் மூலம், ஓட்டுநர்களிடையே வாகனம் ஓட்டும் பழக்கத்தை சிறப்பாகச்செய்வதற்கான பயிற்சி மற்றும் ஊக்கத் திட்டங்களை வடிவமைக்க நிறுவனங்களுக்கு வாகனப் பாதுகாப்பு தொழில்நுட்பம், உதவும்.

ஆதாரம்: மனிதவள அமைச்சகம்
https://www.mom.gov.sg/workplace-safety-and-health/wsh-technology

# எவர்சேஃப்- கதை

## பணிச்சூழலியலில் கைபேசியின் அபாயம்



கைபேசியை பயன்படுத்தும் பழக்கம் நமக்கு பணிச்சூழலியல் அபாயத்தை ஏற்படுத்துகிறது. கைப்பேசியை நீண்ட நேரம் காதுக்கு அருகில் வைத்துப் பிடித்திருப்பது முழங்கை, கழுத்து மற்றும் தோள்களில் பிரச்சனைகளை ஏற்படுத்தும். மேலும், எழுத்துருக்கள் அடர்த்தியாக உள்ள மின்னஞ்சல்கள் மற்றும் ஆவணங்கள் உருவாக்க அல்லது குறுஞ்செய்தி அனுப்ப ஸ்மார்ட்ஃபோனை பயன்படுத்துவது விரல்கள்/கட்டைவிரல்கள், தோள்கள் மற்றும் கழுத்தில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்தும். முன்னோக்கி செல்லும் போது தலையின் கோணம் மாறுவதால், மண்டை ஓடு, தோள்பட்டை எலும்புகள், காலர் எலும்பு மற்றும் கழுத்து ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட தசைகளில் அதிக அழுத்தம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. மொபைல் போன் பயன்பாட்டின் போது ஏற்ப்படக்கூடிய பணிச்சூழலியல் அபாயங்களைக் குறைப்பதற்கான சில குறிப்புகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

1. உங்கள் தலையை முடிந்தவரை நடுநிலையில் வைக்கவும், உங்கள் முழங்கைகள் உங்கள் தோள்களுக்கு கீழே தளர்வாக இருக்க வேண்டும்.

2. உங்கள் கட்டைவிரல் கைபேசியின் எதிர் முனையை வசதியாக எட்டி அடையக்கூடிய தொலைவில் தொலைபேசியை வைத்துக்கொள்ளுங்கள்.

3. கைபேசியில் பேசும்போது நிலையான மற்றும் மோசமான உடல் நிலைகளை கொண்டிருப்பதை தவிர்க்க ஹேண்ட்ஸ்-ஃப்ரீ பயன்பாடு இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

4. சாதனத்தை பிடித்திருக்கும் போது விரல்கள், கட்டைவிரல் மற்றும் மணிக்கட்டில் உள்ள அழுத்தத்தைக் குறைக்க கைபேசியை அதிக இறுக்கமாகப் பிடிப்பதைத் தவிர்க்கவும்.

5. தொலைபேசியைப் பயன்படுத்தும் போது நல்ல தோரணையைபராமரிக்கவும். பயன்பாட்டின் போது ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கும் இடையில் , 2-3 நிமிட இடைவெளியை எடுத்துக் கொள்ளுங்கள்

6. குறுஞ்செய்தி அனுப்ப தேவையான உள்ளீடுகளை குறைக்க குரல் அறிதல், சுருக்க விரிவாக்கம் அல்லது வார்த்தையை நிரப்பும் அமைப்புக்கள் இருந்தால் அவற்றைப் பயன்படுத்தவும்.

நன்றி:
திரு.தணிகாசலம் ரமேஷ்குமார்
பாடத்திட்டத்தை உருவாக்குபவர்
எவர்சேப் அகாடமி


# ஊக்கமளிக்கும் கதை

முன்பொரு காலத்தில் தனது தந்தையின் மரணத்திற்குப் பிறகு ஒரு ராஜ்யத்தைப் பெற்ற ஒரு இளவரசன் இருந்தான் . மேலும், அவர் வளர்ந்து வரும் சமயத்தில் அவருக்கு முன்பிருந்த அனைத்து மன்னர்களையும் போலவே, அனைத்தையும் மிகுதியாகக் அனுபவித்துக் கொண்டிருந்தான். ஆனால் இப்போது அவர் மன்னராக ஆட்சி செய்யத் தொடங்கிய சில மாதங்களில் திடீரென்று அவரது ராஜ்யத்தில் பிரச்சனைகள் தொடங்கியது. வறட்சி பல தாவரங்கள், விலங்குகள் மற்றும் மக்களைக் கொன்றது, அதைத் தொடர்ந்து வந்த நோய்கள் இன்னும் அதிகமாக மக்களைக் கொன்றது . அதன் பிறகு, சிறிது சிறிதாக இயல்பு நிலைக்கு திரும்பி வரும்போது ஒரு எதிரி அரசு படையெடுத்து வந்து தாக்கி, உயிர் பிழைத்தவர்களைக் கொன்றதோடு சிலரை சிறையில் அடைத்தது. வயதில் இளைய மன்னர் எப்படியோ தப்பித்துவிட்டார்.

அண்டை நாட்டை ஆண்டு வந்த தனது பால்ய நண்பரிடம் செல்லும் வழியில், நம் இளையமன்னர், தனக்கு எப்படி இப்படியெல்லாம் நடந்தது என்று ஆலோசித்தார். அவர்களது மக்களுக்கு தெரிந்த வரையில் இருப்பதிலேயே மிகவும் பலம் வாய்ந்த செல்வச்செழிப்பு மிக்க நாட்டு மன்னர் குடும்பத்தில் பிறந்து தலைவராகவும் ஆனார். ஆனால் இப்போது அனைத்தையும் இழந்து விட்டார். . தன் தந்தைக்கோ அல்லது தனக்குத் தெரிந்த வேறு எந்த மன்னருக்கோ இப்படி எதுவும் நடக்காததால் தனக்கு துரதிஷ்டம் ஏற்பட்டதாக அவர் நம்பினார்.

இருப்பினும், இறுதியாக நமது இளையமன்னர் தனது நண்பரின் ராஜ்ஜியத்தின் தலைநகரை அடைந்தபோது, காவலர்கள் அவரை அரண்மனைக்குள் அனுமதிக்கவில்லை. பலமுறை மன்றாடியும் அவரை அனுமதிக்க மறுத்தனர். அவரது கிழிந்த ஆடைகளைப் பார்த்த அவர்கள் அவர் ஒரு நாட்டின் ராஜா என்பதை நம்பவே இல்லை. எனவே, மீண்டும் உள்ளே நுழைய முயற்சிக்கும் முன் இளையமன்னர் ஒரு வேலையைப் பெற்று கண்ணியமான ஆடைகளை வாங்க பணம் சம்பாதிக்க வேண்டும்.

இறுதியாக அவர் புதிய ஆடைகளை அணிந்து கொண்டு சென்றபோது அவர் தனது நண்பர் முன் தோன்ற அனுமதிக்கப்பட்டார். இளையமன்னர் கதையை அவனது நண்பன் கவனமாகவும் கவலையுடனும் கேட்டான். சிறிது நேரம் யோசித்தபின், நாடற்ற மன்னனுக்கு 100 ஆடுகளைக் வழங்கும்படி தன் குடிமக்களுக்குக் கட்டளையிட்டான்.



# ஊக்கமளிக்கும் கதை

இந்த வகையான "நட்பு" அணுகுமுறையை இளையமன்னர் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவரது எதிர்பார்ப்பு இன்னும் அதிகமாக இருந்தது. ஆடு மேய்ப்பனாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தையே அவன் வெறுத்தான். ஆனால், அவனிடம் வேறு எதுவும் இல்லை, வேறு வழியில்லாததால் அவன் நண்பனின் உதவியை பெற்றான். சிறிது காலம் கழித்து, அவர் தனது 100 ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது, ஓநாய்கள் அவரது மந்தையைத் தாக்கி அனைத்து ஆடுகளையும் ஒன்று விடாமல் கொன்றன. இந்தத் தாக்குதலின் ராஜா அங்கிருந்து ஓடிவிட்டார். எனவே இப்போது அவர் தனது நண்பரிடம் திரும்பிச் சென்று மீண்டும் ஒருமுறை உதவி கேட்க வேண்டியிருந்தது.

இந்த முறை அவருக்கு வெறும் 50 ஆடுகளே கொடுக்கப்பட்டன. சிறிது காலத்திற்குப் பிறகு இந்த மந்தையிலுள்ள ஆடுகள் மீண்டும் அனைத்தும் மீண்டும் இறந்தன. . ஆகவே அவர் மீண்டும் ஒரு முறை உதவிக்காக தனது நண்பரிடம் திரும்பிச்சென்றார். 3வது முறையாக அவருக்கு 25 ஆடுகள் மட்டுமே வழங்கப்பட்டது. 25 ஆடுகளையும் இழந்தால், இந்த எண்ணிக்கை பாதியாகக் குறையும் என்று பயந்த இளையராஜா, தனது மந்தையின் மீது அக்கறை காட்டத் தொடங்கினார்.

. அவர் அவைகளை அழைத்துச் சென்ற இடம், அவைகளை சந்தித்த நிலைமைகள் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தினார். காவல் காத்து அதிக பாதுகாப்பை வழங்கினார், மேலும் அவர் அவைகளுடன் பேசினார். சிறிது காலத்திற்குப் பிறகு, அவரிடம் 1000 ஆடுகள் இருந்தன. மகிழ்ச்சியடைந்த அவர், அரண்மனைக்குச் சென்று, தனது நண்பரிடம், ஒரு வருடத்தில், இருமடங்காகப் பெற முடியும் என்ற நம்பிக்கை தனக்கு வந்துவிட்டதாகக் கூறுகிறார்.. இவ்வளவு பெரிய நல்ல செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த அவனது நண்பன் அவனைத் தழுவி, அவனுக்கு ஒரு மாநிலம் முழுவதையும் ஆட்சி செய்யக் கொடுக்கும்படி தன் குடிமக்களுக்குக் கட்டளையிட்டான். தற்சமயம் தனது நண்பரிடம் மிகவும் ஏமாற்றமடைந்து, நட்புறவு பற்றி மிகவும் சந்தேகம் கொண்டிருந்த இளையராஜா, , தனது நண்பரிடம் "உங்களிடம் இருந்திருந்தால் உடனடியாக எனக்கு ஒரு மாநிலத்தை ஏன் கொடுக்கவில்லை?" என்று கேட்டார். அதற்கு இளையராஜாவின் நண்பர் பதிலளித்தார்.

"சரி, உங்கள் ராஜ்ஜியத்தில் என்ன நடந்தது என்பதை நான் கவனித்திருந்ததால், மற்றவர்களை எவ்வாறு நிர்வகிப்பது மற்றும் வழிநடத்துவது என்பதை நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் காத்திருந்தேன். நீங்கள் ஒரு தலைவராகவே பிறந்து வளர்ந்தீருக்கிறீர்கள் என்று நினைத்தீர்கள், ஆனால் உண்மை அதுவல்ல, அதிலிருந்து வெகு தொலைவில் இருந்தது. நீங்கள் செல்வம், கௌரவம் மற்றும் அதிகார பலத்தோடு பிறந்திருக்கலாம், ஆனால் மக்களை வழிநடத்த தேவையான சரியான கல்வி மற்றும் பயிற்சியை நீங்கள் ஒருபோதும் பெற்றிருக்கவில்லை.

**அன்புள்ள நண்பரே, இப்போது நீங்கள் மற்றவர்களை வழிநடத்தத் தயாராக உள்ளீர்கள் என்று நான் நம்புகிறேன்" .**

## கதையின் நெறிமுறை

இளையராஜாவின் நண்பன் சொன்னது போல், "அதிகாரம்" கொண்ட இடத்தில் பிறந்ததால் மட்டுமே ஒருவன் தலைவன் ஆக முடியாது. நீங்கள் மற்றவர்கள் மீது அதிகாரம் செலுத்துபவராகவோ அல்லது அவர்களுக்குப் பொறுப்பானவாரகவோ இருக்கலாம் ஆனால் உங்கள் தகுதியை நீங்கள் நிரூபிக்கவில்லை என்றால் அவர்கள் உங்களை தலைவராக கருதி பின்தொடர்வார்கள் என்பது நிச்சயமல்ல.

• ஒரு தலைவனாகவே பிறந்து வளர்ந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் சிலருக்கு இருப்பது ஒரு மிகப்பெரிய மாயை . அது அவ்வளவு எளிதானதில்லை. அது இரண்டையும் உள்ளடக்கியது. ஒரு நிறுவனத்தின் பார்வையில் மாற்றங்களைச் செய்வதற்கான அதிகாரம் உள்ள பதவியில் நீங்கள் இருக்க வேண்டும், ஆனால் அதே நேரத்தில், வேலைகளை நீங்கள் செய்து மக்களின் நல்லெண்ணங்களையும் உள்ளத்தையும் வென்றெடுக்க வேண்டும்.

**தலைவர்கள் பிறப்பதில்லை, உருவாக்கப்படுகிறார்கள்**

**மூலம்: LINKEDIN.COM**

நன்றி:

திரு.ராம்பு பால் தினகரன்
தலைமை - மனித வளம்

# வாடிக்கையாளர்களின்_ நற்சான்றிதழ்கள்

**எங்கள் மாணவர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான எங்கள் அர்ப்பணிப்புக்கான ஒப்புதல்கள்**

**எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களிடமிருந்து சில ஒப்புதல்கள் மற்றும் பின்னூட்டங்கள்.**

“எங்கள் பணியாளர்களின் பயிற்சி முன்பதிவுக்கு உதவிகரமாக இருந்ததற்கு நன்றி. எதிர்காலத்தில் எங்கள் நிறுவனத் - தில் அடுத்தமுறை யாருக்கெல்லாம் தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் உங்கள் மூலம் முன்பதிவு செய்வதை எதிர் நோக்கியிருக்கிறேன்.”

CR3 (Singapore) PTE LTD

“பாடத்திட்டத்திற்கான முன்பதிவின் போது தொடர்ந்து நீங்கள் காட்டிய உங்கள் பொறுமை மற்றும் வழிகாட்டுதலை நான் மிகவும் பாராட்டுகிறேன். இதுமட்டுமல்லாது இன்னும் சிறப்பாக இப்பணியை நீங்கள் தொடருங்கள் மற்றும் உங்கள் எதிர்கால முயற்சிகளுக்கு நல்வாழ்த்துகள்.”

TONG BEE CONSTRUCTION PTE LTD

“உங்களுடன் மீண்டும் நாங்கள் பணியாற்றுவோம் என்று நம்புகிறேன். சீரான மென்மையான தொடர்பு மற்றும் விரைவான செயல்பாடுகள். இரட்டை பாராட்டுக்கள்”

Saamco Maintenance Pte Ltd

“எனது தேர்வில் எப்போதுமே எவர்சேஃப் அகாடமி முன்னிலை வகித்து வந்திருக்கிறது. அர்ப்பணிப்புடன் கூடிய வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் ஊழியர்களால் வழங்கப்படும் மதிப்புமிக்க சேவை ஆகியவை இதற்கு காரணம்.”

A STAR PACIFIC PTE LTD

# மாணவர்களின் நற்சான்றிதழ்கள்

**எங்கள் மாணவர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான எங்கள் அர்ப்பணிப்புக்கான ஒப்புதல்கள்**


**எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களிடமிருந்து சில ஒப்புதல்கள் மற்றும் பின்னூட்டங்கள்.**



**HENG MIN CHING**

DCE மாணவர்

“ இந்த டிப்ளோமா இன் சிவில் இன்ஜினியரிங் படிப்பு எனக்கு மிகவும் நம்பிக்கையளிக்கிறது, மேலும் எனது கனவை நான் நனவாக்கிக்கொண்டேன், எவர்சேப் நிறுவனத்திற்கு நன்றி. ”



**MR. KYAW NAING OO**

DCE மாணவர்

“ இந்த டிப்ளோமா இன் சிவில் இன்ஜினியரிங் படிப்பு எனக்கு மிகவும் நம்பிக்கையளிக்கிறது, மேலும் எனது கனவை நான் நனவாக்கிக்கொண்டேன், எவர்சேப் நிறுவனத்திற்கு நன்றி. ”



**MR. MANICKAM AJITHKUMAR**

DCS மாணவர்

“ உங்கள் அகாடமியின் இந்த கற்றல் அனுபவம் மிகவும் தகவல் மற்றும் சுவாரஸ்யமாகவும் உள்ளது. ”



**MR. SUBRAMANIYAN KAMARAJ**

SMSE மாணவர்

“ எவர்சேப் பயிற்சி அகாடமி மிகச் சிறந்த பயிற்சி மையம் மற்றும் மிகச் சிறந்த கற்பித்தல் மற்றும் சிறந்த அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்களை கொண்டது. ”



# சுகாதார குறிப்புகள் மற்றும் உத்திகள்

வேலையின் ஒரு பகுதியாக நம்மில் சிலர் மேசைகளில் நீண்ட நேரம் அமர்ந்திருக்க வேண்டியிருக்கும், அதே போல் சில சமயங்களில் குனிந்து, அதிக எடையுள்ள சுமைகளைத் தூக்க அல்லது நாள் முழுவதும் நீண்ட நேரம் வாகனத்தை ஓட்ட வேண்டியிருக்கலாம். இந்தச் செயல்பாடுகள் நம்மில் சிலருக்கு வாழ்வின் ஒரு கட்டத்தில் முதுகுவலியை ஏற்படுத்தலாம்.
சில சமயங்களில் சிறிது ஓய்வு எடுப்பதன் மூலம் கீழ் முதுகுவலியிலிருந்து நிவாரணம் பெறலாம், வலி பொதுவாக நீங்கிவிடும் .

முதுகுவலி ஒரு நோய் என்பதை விட அது ஒரு அறிகுறியாகும். உங்கள் உடல் தோரணை சரியாக இல்லை என்று உங்கள் உடல் சொல்கிறது, எனவே உங்கள் வாழ்க்கைமுறையில் நீங்கள் சில மாற்றங்களைச் செய்ய வேண்டும். முதுகுவலியை நாம் அலட்சியப்படுத்தக் கூடாது, மாறாக அதைக் குறைக்கவும் தடுக்கவும் உடற்பயிற்சிகள் மற்றும் வாழ்க்கை முறைகளில் சில மாற்றங்களை மேற்கொண்டு பின்பற்றலாம்.

**முதுகு வலிக்கான அடிப்படை யோகா**




முதுகுவலியைக் குறைக்க மற்றும் சிகிச்சையளிக்க / நிவாரணம் பெற சில குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

1. சுறுசுறுப்பான வாழ்க்கையை நடத்துங்கள், முதுகின் தசைகளை பொருத்தமாகவும் நெகிழ்வாகவும் வைத்திருக்க வழக்கமான பயிற்சிகளை செய்யுங்கள்
2. போதுமான தூக்கம் கிடைக்கும்
3. நீண்ட நேரம் உட்கார்ந்திருப்பதைத் தவிர்க்கவும்
4. சரியான உணவுமுறையை கடைபிடிக்கவும், ஆரோக்கியமான உடல் எடையை பராமரிக்கவும்
5. சரியான தோரணையை பராமரிக்கவும்
6. மிக விரைவாக வளைவதைத் தவிர்க்கவும்
7. சரியான தோரணையுடன் சுமைகளை உயர்த்தவும்
8. குறைந்த குதிகால் காலணிகளுக்கு மாறவும்
9. பின் பகுதிக்கு கீழே சிறிய தலையணையுடன் உங்கள் முதுகில் தூங்குதல்
10. முதுகுவலியை உணர்ந்தால் விரைவான நிவாரணத்திற்காக பனிக்கட்டி அல்லது வெப்ப பைகளைப் பயன்படுத்தவும்.

**எவர்சேஃப் அகாடமி அனைவருக்கும் மகிழ்ச்சியான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை அமைய வாழ்த்துகிறது!**

# வேடிக்கையான புதிர்கள் மற்றும் விளையாட்டுகள்

**இணை பொருத்தப் புதிர் – கொடுக்கப்பட்ட ஆபத்து குறித்த சூழல் வரைபடத்திற்கு பொருந்தக் கூடிய விளக்கத்தை நிரப்பவும். (உருவாக்கியவர், ரிச்சர்ட் சிம், பாடத்திட்டத்தை உருவாக்குபவர், எவர்சேஃப் அகாடமி)**



| | | |
|---|---|---|
| 1. அழுத்தத்தில் உள்ள எரிவாயு | 4. அரிக்கும் | 7. சுற்றுச்சூழலின் நச்சுத்தன்மை |
| 2. எரியக்கூடியது | 5. உயிரகப்படுத்தி | 8. வெடிக்கும் |
| 3. எரிச்சலூட்டும் | 6. தீவிர நச்சுத்தன்மை (கடுமையான) | 9. புற்றுநோயை உண்டாக்கும் தன்மை |

**நீங்கள் பூர்த்தி செய்ததைச் சமர்ப்பிக்க QR கோடை ஸ்கேன் செய்யவும்**

பரிசுகளை வெல்வதற்கான வாய்ப்பைப்பெற, தயவு செய்து ஆபத்து சூழல் வரைபட புதிரின் இணைப் பொருத்தத்தை பூர்த்தி செய்து அதன் ஒரு புகைப்படத்துடன் உங்கள் விவரங்களை இணைத்து ஜனவரி 1, 2023க்கு முன் எங்களின் QR கோடு மூலம் பதிவேற்றம் செய்யுங்கள்.

**PRIZES**

1st S$50
2nd S$40
3rd S$30

**நவம்பர் 2022 EA இதழின் பணியிடப் படப் புதிருக்கான விடைக்குறிப்பு**



# சமீபத்திய EA பாடத்திட்டங்கள்



## 1. மென் திறன் பாடத்திட்டங்கள்

அதிவேகமாக வளர்ந்து வரும் உலகில் ஆங்கிலத்தில் பேச சிரமப்படுபவர்கள், மற்றும் கணினியைப் பயன்படுத்த இயலாதவர்கள் அவர்கள் படித்தவராக இருந்தாலும் படிப்பறிவில்லாதவராகவே கருதப்படுகிறார்கள். புலம்பெயர்ந்த எங்கள் தொழிலாளர்கள் தங்கள் மொழி (அவர்களின் பணித்தளத்தில் எளிமையான ஆங்கிலம் பேசுவது) மற்றும் கணினித் திறனை (அடிப்படை மற்றும் மேம்பட்ட செயல்பாடுகளுக்கு கணினியை பயன்படுத்தக் கற்றுக்கொள்வது), மேம்படுத்தவும் பின்வரும் திருத்தப்பட்ட பாடத் திட்டங்களுடன் கூடிய கல்வித்திட்டங்களை எவர்சேஃப் அகாடமி தொடங்கியுள்ளது.

| | |
|---|---|
| 1. ஆங்கிலத்தில் சரளமாக பேசுவது (அடிப்படை நிலை) | 15 மணிநேரம் - $200* |
| 2. கணினி பாடத்திட்டம் (அடிப்படை நிலை) | 28 மணிநேரம் - $250* |
| 3. கணினி பாடடத்திட்டம் (இடைநிலை) | 24 மணிநேரம் - $350* |

**BEFORE 7% GST**

## 2. பயிற்றுனருக்கான பயிற்சி (டி3) பாரந்தூக்கும் வேலைக்கான செயல் திட்டம் (லிப்டிங் பிளான்) (T3LP)

எவர்சேஃப் அகாடமியில் பாதுகாப்பாக பாரந்தூக்கும் இயக்கமுறை” பாடத்திட்டத்தை கற்பிக்கும் அல்லது தகுதிபெற்ற அல்லது கற்பிக்க விரும்பும் அனைத்து பயிற்சியாளர்களுக்கும் பயிற்சியாளருக்கான பயிற்சி (T3) பாரந்தூக்கும் வேலைக்கான செயல் திட்டம் (லிப்டிங் பிளான்) (T3 LP) ஒன்றை எவர்சேஃப் அகாடமி உருவாக்கி அறிமுகப்படுத்தியிருக்கிறது. T3LP இல் இன்று வரை 18 பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.



## 3. MEWP இயந்திரங்களை இயக்குவதற்கான அறிமுக செய்முறை பயிற்சி


MEWP பாடத்திட்டத்தை கற்பிக்கப் பயன்படுத்தப்படும் இயந்திரங்களில் பயிற்சியாளர்களின் திறன்களை மேப்படுத்த “MEWP இயந்திரங்களை இயக்குவதற்கான அறிமுக செய்முறை பயிற்சி ” பாடத்திட்டத்தை எவர் சேஃப் அகாடமி உருவாக்கி அறிமுகப்படுத்தியுள்ளது. எவர்சேஃப் அகாடமியில் "MEWP பாடத்திட்டத்தை " கற்பிக்க , தகுதியுள்ள அல்லது விரும்பும் அனைத்து பயிற்சியாளர்களுக்கும் இந்த பாடத்திட்டம் கட்டாயம். இது 24/02/2022 தொடங்கப்பட்டது. எவர்சேஃப் அகாடமியில் MEWP பாடத்திட்டத்தை நடத்துவதற்கு இதுவரை 12 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது

Scan QR code to view all our Courses

# எதிர்வரும் நிகழ்வுகள்

## 1. நுண் சிந்தனை மற்றும் முடிவெடுத்தல் குறித்த பயிலரங்கம்

எங்களின் தற்போதைய மாணவர்களின் ஆளுமையை மேம்படுத்தவும், அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு அவர்களை நன்கு தயார்படுத்தவும், எவர்சேஃப் அகாடமி டிசம்பர் 3 ஆம் தேதி (சனிக்கிழமை) **" விமர்சனச் சிந்தனை மற்றும் முடிவெடுத்தல்"** என்ற தலைப்பில் ஒரு பயிலரங்கை நடத்த திட்டமிட்டுள்ளது.




பயிலரகிற்கு பதிவு செய்ய QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

# வரவிருக்கும் நிகழ்வுகள்

## 2. சுற்றுச்சூழலை சுத்தப்படுத்துதல்



கார்ப்பரேட் சமூகப் பொறுப்புகள் (CSR) தொடர்பான முன்முயற்சியின் ஒரு பகுதியாக, எவர் சேஃப அகாடமி 17 டிசம்பர் 2022 அன்று முன்னாள் மாணவர்கள் மற்றும் தற்போதைய
மாணவர்களில் 50 தன்னார்வலர்களை அழைத்து "சுற்றுச்சூழல் சுத்தம்"செய்யும் CSR செயல்பாட்டை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. பயிற்சி பெற்ற எவர் சேஃப்அகாடமி ஊழியர்களின் வழிகாட்டுதலின் கீழ் அவர்கள் 5 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, லிட்டில் இந்தியாவில் அடையாளம் கண்டறியப்பட்ட பகுதிகளில் சுற்றுப்புறச் சூழல் சுத்திகரிப்பு பணிகளுக்கு உதவுவார்கள்.

## 3. இரத்த தான இயக்கம்



அவசர காலங்களில் உயிர்களைக் காப்பாற்ற உதவும் விதமாக, எவர் சேஃப் அகாடமி செஞ்சிலுவைச் சங்கத்துடன் (Red Cross) இணைந்து 24 டிசம்பர் 2022 அன்று (சனிக்கிழமை) மதியம் 2.00 மணிக்கு அதன் இரண்டாவது சுற்று "இரத்த தான இயக்கத்தை" நடத்தும் .

## 3. கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறை நாட்களில் சிறப்பு வகுப்புகள்




வேலை செய்யும் ஊழியர்கள் பணிச்சுமையையும், நேரப் பற்றாக்குறையையும் கருத்தில் கொண்டு எவர்சேஃப் அகாடமி எதிர்வரும் பொது விடுமுறை நாட்களான 2022 டிசம்பர் 25 மற்றும் 26 மற்றும் ஜனவரி 1 மற்றும் 2 தேதிகளில் சிறப்பு வகுப்புகளை ஏற்பாடு செய்கிறது.

BOOK NOW!

சிறப்பு வகுப்புகளுக்கு பதிவு செய்ய QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

# எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்

**நாங்கள் பணியமர்த்துகிறோம்!**

**எங்கள் குழுவில் இணையுங்கள்**

- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் நிர்வாகி - 3 PAX
- மாணவர் ஆதரவு சேவை அதிகாரி - 2PAX
- பயிற்சியாளர்கள் / ஆசிரியர்கள்

**உங்கள் விண்ணப்பத்தை மின்னஞ்சல் செய்யவும்**



# எவர்சேப் அகாடமி பற்றி

எவர்சேப் அகாடமி என்பது சிங்கப்பூர் மற்றும் பிராந்தியத்தில் உள்ள வயது வந்த யிற்சியாளர்கள் மற்றும் PMETகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய புதுமையான பயிற்சிகளை வழங்குவதற்காக சிறப்பாக நிறுவப்பட்ட ஒன்றாகும் . பணியிடப் பாதுகாப்பு, பெருநிறுவன இழப்புக் கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறை இணக்கம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதில் பயிற்சி பெற்ற மற்றும் திறமையான அனுபவம் வாய்ந்த மற்றும் அர்ப்பணிப்புள்ள பாதுகாப்பு நிபுணர்களைக் கொண்ட குழுவைக் கொண்ட நாங்கள் , வேலையிட பாதுகாப்பு மற்றும் சுகாதார பயிற்சி (WSH) துறையில் நன்கு அறியப்பட்டவர்களில் ஒருவராக இருக்கிறோம். பல்வேறு மேலாண்மை அமைப்புகளை செயல்படுத்துவதற்கும் நிறுவுவதற்கும் உதவக்கூடிய அனுபவம் வாய்ந்த பொறியாளர்களின் குழு எங்களிடம் உள்ளது.

தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் மேலாளர்கள் தங்கள் பணிகளைப் பாதுகாப்பாக மேற்கொள்ள போதுமான அறிவைப் பெற்றுள்ளனர் என்பதை உறுதிப்படுத்த அவர்களுக்கான பாதுகாப்புத் திறன் தொகுப்புகளை மேம்படுத்த சிறப்பான பயிற்சி அளிக்கின்றோம். கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் நாங்கள் பயிற்சி அளிக்கிறோம்.

செயல்முறை அறிக்கைகள், இடர் மதிப்பீடு, பாதுகாப்பான பணி நடைமுறைகள் மற்றும் பிற அத்தியாவசிய தொழில்முறை அறிவுரைச் சேவைகளை வழங்குவதன் மூலம் உங்களுக்கான தொழில்முறை ஆலோசனைகளை வழங்கி ஒரு பாதுகாப்பான பணியிடத்தை நிர்வகிக்க உதவுகிறோம்.

பதிவுபெற்ற ஒரு தனியார் கல்வி நிறுவனமாக எங்களின் ஒரு சிறப்பான கற்பித்தல் நடைமுறைகள் மற்றும் மாணவர்களின் அனுபவங்களின் ஒரு பகுதியாக, 4-ஆண்டுகளுக்கான EduTrust அங்கீகார தர தரநிலை குறியீட்டையும் கிடைக்கப்பெற்று நாங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறோம்.

எங்களது
**தொலைநோக்கு பார்வை**

கல்வி கற்பித்தல் அதிகாரம் வழங்குதல் மற்றும் மாற்றத்தை உருவாக்குதல்

நமது
**இயக்கப்பணி**

தரம்,
புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி

நமது
**மதிப்பீடுகள்**

மேன்மை,வாழ்நாள் முழுமைக்குமான கற்றல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம்

# thank you!

FOR YOUR VALUABLE TIME

FOLLOW US ON SOCIAL MEDIA

எங்களின் EA இதழின் 3வது இதழை
நீங்கள் விரும்பியிருப்பீர்கள்
என்று நம்புகிறோம்.

www.eversafe.edu.sg





Our goal is to provide you with the latest training and education in all aspects of your job.

# EVERSAFE ACADEMY

Steps To Success

Vision: Educate, Empower & Transform

Mission: Quality, Innovation & Research

Values: Excellence, Life-long Learning & Technological Advancement

HOLISTIC EDUCATION

+65 6297 8417

+65 9381 3608

www.eversafe.edu.sg

training@eversafe.com.sg

No.2, Kampong Kapor Rd,
Little India
Singapore 208674

No.3, Soon Lee Street,
#04-14,16,17,
Pioneer Junction,
Singapore 627606

No.2, Joo Koon Road,
Singapore 628966

No.2, Wan Lee Road,
Singapore 627934

## EMERGENCY HOTLINE NUMBERS

- POLICE 999
- FIRE / AMBULANCE 995
- NON EMERGENCY 1777
- MOM 6438 5122
- NEA 1800 225 5632
- SP POWER 1800 778 8888
- PUB 1800 225 5782
- COMFORT / CITYCAB 6552 1111
- SMRT 6555 8888

Copyright © Eversafe Academy 2022